தினமலர்
உண்மையின் உரைகல்

## மல்பரி சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,23:38 IST

தர்மபுரி: தர்மபுரியில் மத்திய பட்டு வாரியமும், தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித் துறை சார்பில் அலுவலர்களுக்கான இயற்கை முறையில் மல்பரி குறித்த பயிற்சி நடந்தது. பட்டு வளர்ச்சித் துறை மண்டல இணை இயக்குனர் சந்திரசேகர் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் ஜெயக்குமார் வரவேற்றார். அலுவலர்களுக்கு மல்பரி சாகுபடி மற்றும் தோட்ட பராமரிப்பு குறித்து தொழில் நுட்பங்கள் குறித்து சேலம் மண்டல பட்டு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ராஜ்குமார் பேசினார். விவசாயிகளின் வயல்களில் உள்ள களைகள், வீணாகும் இலை தழைகள் போன்றவற்றை பயன்படுத்தி எளிய முறையில் கம்போஸ்ட் உரம் தயாரித்து மல்பரி தோட்டத்துக்கு இடுதல் மற்றும் மல்பரி தோட்டங்களில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகளை பயன்படுத்தும் முறைகள் குறித்து அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

## வெல்லம் வரத்து குறைவு விலை கிலோ ரூ. 1 உயர்வு

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,23:47 IST

கோபிசெட்டிபாளையம்: வெல்லம் உற்பத்தி குறைவால், வரத்து குறைந்து, விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் அதிகரித்துள்ளது. சித்தோடு, கவுந்தப்பாடி வெல்லம் மார்க்கெட்களுக்கு சராசரியாக, 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் சிப்பம் உருண்டை வெல்லம், 10 ஆயிரம் மூட்டை நாட்டு சர்க்கரை வரத்தாகும். நடப்பு மாத துவக்கத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கியதை தொடர்ந்து, வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மழை ஓய்ந்த நிலையில், மீண்டும் மழை பெய்யத் துவங்கியுள்ளது. நடப்பு மாதத்தில் வெல்லம் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளதால் மார்க்கெட்டுக்கு, 30 ஆயிரம் சிப்பம் மட்டுமே வரத்தானது. விலையும் கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

வெல்லம் உற்பத்தியாளர்கள் கூறியதாவது: வெல்லம் உற்பத்தி சீஸனில் சித்தோடு, அம்மாபேட்டை, முள்ளாம்பரப்பு, பிழிக்கல்பாளையம் ஆகிய பகுதிகளில், 50 ஆயிரம் முதல், 60 ஆயிரம் சிப்பம் உருண்டை வெல்லம் உற்பத்தி செய்யப்படும். 10 ஆயிரம் மூட்டை நாட்டு சர்க்கரை உற்பத்தியாகும். மழையால், வெல்லம் உற்பத்தி, 30 ஆயிரம் சிப்பமாக குறைந்துள்ளது.

நாட்டு சர்க்கரை, 7,000 மூட்டையாக குறைந்துள்ளது. நாட்டு சர்க்கரை 60 கிலோ மூட்டை, 1,300 முதல் 1,580 ரூபாய் வரையும், அச்சு வெல்லம் 30 கிலோ மூட்டை, 800 முதல் 950 ரூபாய் வரையும், உருண்டை வெல்லம், 780 முதல் 870 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. சென்ற வாரத்தை காட்டிலும் உருண்டை வெல்லம் கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை அதிகரித்துள்ளது. பண்டிகை காலம் துவங்க உள்ளதால் வெல்லம் தேவை அதிகரித்துள்ளது. வெல்லம் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளதால் வெல்லம் விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**ஈரோடு மாவட்டத்தில் மீண்டும் பருவமழை! பவானிசாகர் நீர் திறப்பு குறைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,23:46 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை மீண்டும் துவங்கியதால், பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி அருகே கடலில் ஏற்பட்டுள்ள குறைந்தழுத்த தாழ்வு நிலையால், ஈரோட்டில் 24ம் தேதி மதியத்திலிருந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் சூரியனே தெரியாத அளவில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. நேற்று முன்தினம் இரவு விடிய விடிய தொடர்ந்து மழை பெய்தது. நேற்று காலையும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. காலை முதலே லேசாகவும், மிதமாகவும் மழை பெய்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

கோபிசெட்டிபாளையம்: நவம்பர் மாத துவக்கத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 78 அடியில் இருந்து, 87 அடியாக உயர்ந்தது. பலத்த மழை எதிரொலியாக நவ., 2ம் தேதி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டது. மழை பொய்த்ததை தொடர்ந்து கீழ்பவானி வாய்க்காலில், 2,000 கன அடியும், ஆற்றில், 700 கன அடியும் திறக்கப்பட்டது. நேற்று முன்தினம் முதல் மீண்டும் கோபி பகுதியில் சாரல் மழை பெய்தது; பாசனத்துக்கான தண்ணீர் தேவை குறைந்தது. இதன் காரணமாக பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. கீழ்பவானி வாய்க்காலில், 1,500 கன அடி, பவானி ஆற்றில், 200 கன அடி தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. அணை நீர்மட்டம், 85.46 அடியாகவும், தண்ணீர் வரத்து, 1,700 கன அடியாகவும் உள்ளது.

மழை அளவு: ஈரோடு-45 மி.மீ., பெருந்துறை-22, பவானி-27.4, கோபி-23, சத்தியமங்கலம்-9, பவானிசாகர்-8, தாளவாடி-3, எலந்தகுட்டை மேடு-15, கொடிவேரி அணை-8, மூலப்பாளையம்-34, மொடக்குறிச்சி-22, சக்திநகர் -18 சித்தார் -25, அந்தியூர் -18, வெள்ளித்திருப்பூர் -15, அத்தாணி -

15, புதுக்கரைப்புதூர் -17, கவுந்தப்பாடி 24, காஞ்சிகோவில் -13, அம்மாபேட்டை -36, சந்தைபேட்டை -15, குருவரெட்டியூர் 022, டி.என்.பாளையம் -15, டி.ஜி.புதூர் -10, கள்ளிப்பட்டி -13, காசிபாளையம் -13, குருமந்தூர் -11, அவல்பூந்துறை -20, சென்னிமலை -66 மி.மீ., மழை பதிவானது.
தாராபுரம்: தாராபுரம் பகுதி கிராமங்களில், 24 மணி நேரத்தில் மழையும், வெயிலும் மாறிமாறி வந்ததால் குடையை விரித்தும், மடக்கியும் பொது மக்கள் தங்கள் அன்றாட பணிகளை மேற்கொண்டனர். தாராபுரம், மூலனூர், குண்டடம் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை துவங்கிய மழை நேற்று மாலை வரை விட்டு விட்டு பெய்தது. நெல் வயல்கள், வாழை, கரும்பு தோட்டங்களில் தண்ணீர் குளம்போல் தேங்கியது. நேற்று காலை, 8 மணி வரை தாராபுரத்தில் 70 மி.மீ., மூலனூர் 50, உப்பாறு 35 மி.மீ., மழை பதிவானது.

**நெல், பருத்தியை பாதுகாக்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,02:55 IST

கோவை:"நெல், பருத்தி, மஞ்சள், கரும்பு, நிலக்கடலை, தென்னை ஆகிய பயிர்களை நோய் தாக்குதலில் இருந்து பாதுகாத்து கொள்ளுங்கள்' என, வேளாண் பல்கலை சார்பில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் செடிகளில் இலைப்புள்ளி நோய் பரவலாக உள்ளது. இரவு நேரங்களில் மழையும், பகல் நேரத்தில் குறைந்த தட்ப வெப்ப நிலையும் நிலவும்போது நோய் பரவுகிறது. ஒரு கிராம் கார்பன்டாசிம் மருந்தினை, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து பயிர்களில் தெளிக்கவும்.திருநெல்வேலி மாவட்டத்தில் தென்னை மரத்தில் காண்டாமிருக வண்டின் தாக்குல் கண்டறியப்பட்டுள்ளது. விவசாயிகள் பயிர்பாதுகாப்பு முறையான ரைனோசர் எனும் இனக்கவர்ச்சி பொறி இரண்டு எக்டருக்கு ஒன்று வைத்து வண்டினை அழிக்கலாம்.மேலும் 10 மி.லி., மோனோ குரோட்டோபாஸ் மருந்துடன், 10 மி.லி., தண்ணீரில் கலந்து வேரின் மூலம் செலுத்தி கட்டுப்படுத்தலாம். தென்னையில் சிலந்தி பூச்சித் தாக்குதலை, அசாடிராக்டினை ஐந்து மி.லி.,ரை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது வேப்பெண்ணெய்யுடன் டீப்பால் 30 மி.லி.,ரை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து 45 நாள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தண்டு ஒழுகல் நோய் தாக்குதலை ஒரு சதவீதம் போர்டோ கலவையை தெளித்து கட்டுப்படுத்தவும்.மரவள்ளி, பப்பாளி, மல்பெரி ஆகிய பயிர்களில் பப்பாளி மாவுப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக உள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலை ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள், கல்லூரிகளை தொடர்பு கொண்டு ஒட்டுண்ணிகளை இலவசமாக

பெற்று, பாதிக்கப்பட்ட வயல்வெளிகளில் விட்டு கட்டுப்படுத்தவும்.கூடுதல் தகவல்பெற வேளாண் பூச்சியல் துறை, பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை, கோவை, 0422-6611214, 6611226 என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம் என, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாய கருவிகளுக்காகமதுரைக்கு ரூ.98 லட்சம் நிதி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,04:45 IST

மதுரை:தேசிய விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாய இயந்திரங்கள் வாங்க 50 சதவீதம் வரை அரசு மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக மதுரை மாவட்டத்திற்கு ரூ. 97.75 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. இதில் பவர் டில்லர், டிராக்டர் மூலம் இயக்கப்படும் உழவுக் கருவிகள், நெல் நடவு இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், பவர் ஸ்பிரேயர், கதிர் அறுவடை இயந்திரம், மக்ககாச்சோளம் பிரித்தெடுக்கும் இயந்திரம், தென்னை மட்டையை ஒரே அளவாக வெட்டும் இயந்திரம் ஆகியவற்றுக்கு 30 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. விருப்பமுள்ள விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், விவசாய பொறியியல் துறை, 60, டி.பி.கே.ரோடு, மதுரை-11' என்ற முகவரியிலும் (0452- 2677990), "உதவி செயற்பொறியாளர், விவசாய பொறியியல் துறை, காளைத்தேவர் நகர், தேனிமெயின் ரோடு, உசிலம்பட்டி'(04552- 253604) முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம் என, கலெக்டர் சகாயம் தெரிவித்துள்ளார்.

**மரக்கன்று நடும் திட்டம்விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,00:40 IST

திண்டுக்கல்:தனியார் நிலத்தில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தில், நான்கு ஆண்டுகளில், விசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக, 59 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 2007 முதல் தனியார் நிலங்களில் இலவசமாக மரக்கன்றுகள் நடும் திட்டம், வனத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
இத்திட்டத்தின் மூலம் தேக்கு, சவுக்கு, பூவரசு, சில்வர் ஓக், யூக்கலிப்டஸ், வேம்பு வகை மரக்கன்றுகள் நடப்பட்டன. தனியார் நிலங்களில் நடப்பட்ட மரக்கன்றுகளை முறையாக பராமரிக்கும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக, நான்கு ஆண்டுகளில் 59 லட்சத்து 67 ஆயிரத்து 603 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 489 விவசாயிகளின் 2,532 ஏக்கரில், ஒரு லட்சத்து 30 ஆயிரம் சவுக்கு உள்ளிட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

2010 -11 ல், மரக்கன்றுகளை நல்ல முறையில் பராமரித்த விவசாயிகளுக்கு 22 லட்சத்து 67 ஆயிரத்து 431 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**300 ஏக்கர் காலிபிளவர் வீண் கண்ணீர் சிந்தும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,21:45 IST

பழநி : பழநி அருகே காளிபட்டியில் மழைநீர் தேங்கி, 300 ஏக்கரில் காலிபிளவர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மஞ்சநாயக்கன்பட்டி, காளிபட்டி, கொங்கபட்டி, கம்பளி நாயக்கன் பட்டி பகுதிகளில், காலிபிளவர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இரண்டு நாட்களாக பெய்யும் மழையால், தண்ணீர் தேங்கி செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து காளிபட்டி விவசாயி சாமிக்கண்ணு கூறுகையில், ""ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை செலவிட்டுள்ளோம். பூக்கள் சேகரிப்பு காலத்தில் பெய்த மழையால், தண்ணீர் தேங்கியுள்ளது. பூக்கள் அழுகி வீணாவது மட்டுமின்றி, ஒன்றுடன் ஒன்று இணையாமல் தனித்தனியே வளர்ந்துள்ளன. இதனால் பலத்த நஷ்டம் ஏற்படும்," என்றார்.

தோட்டக்கலை அதிகாரிகள் கூறுகையில், "காலிபிளவருக்கு தேவையான போரான், மக்னீசிய நுண்ணூட்ட சத்துக்கள் கிடைக்காததால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். 65 முதல் 70 நாட்களுக்குள் பூக்களை சேகரிப்பது வழக்கம். பருவம் தவறிய நிலையில், மொட்டுகள் வளர்ச்சி அடைந்து, இனப்பெருக்க நிலைக்குச் செல்லும். தோட்டக்கலை அதிகாரிகளை அணுகினால், நிவாரணத்திற்கு வாய்ப்பு உண்டு,' என்றனர்.

**வண்ண வண்ண செவ்வந்தி மணக்குது வத்தலக்குண்டு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,21:40 IST

வத்தலக்குண்டு : திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே செவ்வந்தி பூக்கள் பூத்து, மணம் வீசுகின்றன. இங்குள்ள கோம்பைப்பட்டி, குளிப்பட்டி, எம்.குரும்பட்டியில் நவம்பர் முதல் ஜனவரி வரை செவ்வந்தி பூக்கள் விளையும். இம்மாதங்களில் ஐயப்ப, முருக பக்தர்கள் கோயில்களுக்கு செல்வதால், இப்பூக்களுக்கு கிராக்கி அதிகம். திருத்திய சாகுபடி முறையில் பாத்தி ஓரத்தில் குச்சிகள் நட்டு, அவை கயிறுகளால் இணைக்கப்படுகின்றன. இதனால் செடிகள் அடர்த்தியாக வளர்ந்து, அதிக பூக்களும் மலர்கின்றன. பறிப்பதும் சுலபம்.

நவம்பரில் அறிமுக பட்டம் நடப்பட்டு, மூன்று மாதங்களுக்குள் அடுத்தடுத்து பயிரிடுவதால், விலை சரிந்தாலும் நஷ்டம் ஏற்படாது. இப்பூக்கள் தமிழகத்தின் மற்ற பகுதிகள், தென் மாநிலங்களுக்கு சிறிய கூடைகளில் அனுப்பப்படுகின்றன. ஐயப்பனுக்கு உகந்த பூ என்பதால், பக்தர்கள் விரும்பி வாங்குகின்றனர். இங்கு வெள்ளை, மஞ்சள் செவ்வந்தி விளைச்சல் அதிகம். இப்பகுதியில் செல்வோருக்கு, விதவிதமாக பூத்திருக்கும் பூக்கள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன.

**நெற்பயிரில் கூட்டுப்புழு கட்டுப்படுத்த ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,21:56 IST

தேனி : விவசாயதுறை இணை இயக்குனர் இமாம்தீன் ஆலோசனை வழங்கி உள்ளார். அவரது அறிக்கை: நெல் பயிரில் உள்ள இலைசுருட்டுப்புழு, கூட்டுப்புழு ஆகியவை இலைகளில் உள்ள பச்சையத்தை சுரண்டி தின்று விடும். இலைகள் கண்ணாடி போல் தோன்றும். இப்புழுக்களின் தாக்குதலைக்கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு பாசோலோன் 1500 மி.லி., அல்லது குளோரிபைபாஸ் 1250 மி.லி.,அல்லது மானோக்ரோடோபாஸ் 1000 மி.லி.,என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்தலாம். உயிரியல் முறையில் ட்ரைக்கோகிரமா கைலோனிஸ் என்ற ஒட்டுண்ணியை நடவு செய்த 35 நாட்களுக்கு பின் ஒரு வார இடைவெளியில் ஹெக்டேருக்கு 5 மி.லி. என்ற அளவில் மூன்று வாரங்களுக்கு விடுவித்து புழுக்களை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**முயல், வேலி மசால் பயிர் சாகுபடிக்கு அரசு மானியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2011,21:35 IST

ராமநாதபுரம் : பால்வளத்தை மேம்படுத்த கால்நடைகளுக்குரிய பசுந்தீவனம் சாகுபடிக்கு அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. கால்நடைகளின் பராமரிப்பு செலவை குறைப்பதில் பசுந்தீவனம் முக்கிய பங்காற்றுகிறது. புரதச்சத்து நிறைந்த வேலி மசால், முயல்மசால் போன்ற பயிரை இறவையிலும், மானாவாரியிலும் பயிர் செய்து, கறவை மாடுகளுக்கு வழங்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ-3, கோ-4 உடன் முயல் மசால், வேலி மசால் தீவனப்பயிர்கள் இறவையில் சாகுபடி செய்ய கால் ஏக்கருக்கு 2590 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது. மானாவாரியில் கால் ஏக்கரில் தீவனசோளம், தீவன மக்காசோளம் உடன் தீவனதட்டைப்பயிறு சாகுபடி செய்ய 1350 ரூபாய் மானியம், தெளிப்பு நீர் பாசன கருவிகள் நிறுவுவதற்கு குறு மற்றும்

சிறு, குறு விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ள. இதர விவசாயிகளுக்கு 18 ஆயிரத்து 750 மானியம், கை மற்றும் மின்சக்தியால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில் 75 சதவீதம் மானியம், ஊறுகாய் புல் தயார் செய்ய 30 ஆயிரம் மானியம் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

**மஞ்சள் பயிரில் இலை கருகல் நோயா? கோபி விவசாயிகள் குழப்பம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2011,21:56 IST

கோபிசெட்டிபாளையம் : கோபி பகுதியில் மஞ்சள் இலை கருகியிருப்பது; அறுவடை தருணத்தை எட்டியுள்ளதா; அல்லது இலை கருகல் நோயா? என்ற குழப்பத்தில் விவசாயிகள் உள்ளனர். கோபி தாலுகா சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் 25 ஆயிரம் ஏக்கரிலும், எல்.பி.பி., பாசனப் பகுதிகளில் 15 ஆயிரம் ஏக்கரில் நெல், வாழை, மஞ்சள், கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. 13 ஆயிரம் ஹெக்டரில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. பங்களாபுதூர், கள்ளிபட்டி, டி.என்.பாளையம், கரட்டுபாளையம், காசிபாளையம், கூகலூர் உள்ளிட்ட பகுதிகளில் மஞ்சள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மஞ்சள் மற்றும் வாழையில் இலை கருகல் நோய் ஏற்பட்டது.
சில நாட்களுக்கு முன் பெய்த தொடர் மழையால் மஞ்சளில் வேரழுகல் நோய் ஏற்பட்டது. விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது, மஞ்சள் செடி காய்ந்து காணப்படுகிறது. மஞ்சளில் இலை கருகல் நோய் ஏற்பட்டுள்ளதா; அல்லது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளதா? என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது: மஞ்சள் பயிர் நன்றாக வளர்ந்த நிலையில், திடீரென இலை கருகல் ஏற்பட்டது. மருந்து தெளித்தோம். தற்போது, மஞ்சள் செடி முழுவதும் காய்ந்து கிடக்கிறது. செடிகளை பறித்து பார்த்தால், மஞ்சள் விளைச்சல் சரியாக இல்லை. நோய் ஏற்பட்டதால் இவ்வாறு உள்ளதா? என்ற குழப்பம் உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர். தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் பொங்கியண்ணன், ""கோபி தாலுகாவில் 13 ஆயிரம் ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எட்டாம் நம்பர் மஞ்சள் அறுவடைக்கு தயாராக உள்ளது. கோபி, பங்களாபுதூர், பொலவகாளிபாளையம், வேட்டைக்காரன்பாளையம், கூகலூர், டி.என். பாளையம் ஆகிய பகுதியில் நடப்பாண்டு வெயில் அடித்ததால், மஞ்சள் இலை கருகி காணப்படுகிறது. இலை கருகல் நோய் பாதிப்பு இல்லை," என்றார்.